DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 265 of 2024 |
| Deposition of witness for | : | PW10 |
| Name | : | கங்காதரன் |
| Father's Name | : | முனுசாமி கவுண்டர் |
| Village | : | பாலிநாயனப்பள்ளி |
| Taluk | : | பருகூர் |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | விவசாயம் |
| Age | : | 66 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 21st day of November 2025.

எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பெயரில் எதிரி ஆஜரில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளார். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :-

நான் தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம், பாலிநாயனப்பள்ளியில் குடியிருந்து வருகிறேன். நான் பர்கூர் AEO அலுவலகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன். விபத்தில் இறந்து போன முனிராஜ் எனது பங்காளி ஆவார். சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு காலை 06.00 - 06.20 மணியளவில் முனிராஜ் என்பவரின் மனைவி பொன்மொழி என்பவர் எனக்கு போன் செய்தார். ஒரப்பம் பஸ்டாப் அருகே முனிராஜ்-க்கு விபத்து ஏற்பட்டு வண்டி மேலே ஏறியதால் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டதாக தகவல் சொன்னதன் பேரில் ஒரப்பம் பேருந்து நிறுத்தத்திற்கு சென்று பார்த்தேன். சம்பவ இடத்தில் இருந்து நானும், எனது தம்பி மகன்களும் தான் முனிராஜ்ஜை ஆம்புலன்சில் ஏற்றி கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். இறந்து போன முனிராஜ் இருசக்கர வாகனத்தில் செல்லும் போது விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். அவரது பிரேத விசாரணையில் கலந்து கொண்டேன். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–

இறந்துபோனவர் எனக்கு அண்ணன், தம்பி உறவு முறை அதாவது பங்காளிகள் ஆகும். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான், தகவல் கேள்விப்பட்டு போய் பார்த்தேன். நான் போய் பார்க்கும் போது காலை 06.25 – 06.30 மணி இருக்கும். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், ஆம்புலன்சில் ஏற்றி அனுப்பவில்லை என்றாலும் நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை :–

இல்லை.

M SANTHI

CHIEF JUDICIAL MAGISTRATE,KRISHNAGIRI
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.